2017 ஜூன் 29]

2. தகவல் கோரல்

(அ) தடை செய்யப்பட்ட மாவா மற்றும் குட்கா போன்ற போதைப் பொருட்களை காவல் துறை அதிகாரிகள் துணையோடு விற்பனை செய்ததாக எழுந்த புகார்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நேரமில்லா நேரத்தில் ஒரு பிரச்சினையை நான் எழுப்பியபோது, அது ஆய்வில் இருக்கிறது என்று நீங்கள் இங்கே எடுத்துச்சொன்னீர்கள். அதுமட்டுமல்ல; அதற்குரிய ஆதாரங்களையும் நான் தங்களிடத்திலே வழங்கியிருக்கிறேன். எனவே, அதுகுறித்து இந்த மன்றத்திலே விவாதிப்பதற்கு நீங்கள் அனுமதி தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார், உட்காருங்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நேற்றைக்கே அந்தப் பிரச்சினையை raise *பண்ணினார். என்னிடத்தில் அந்த விவரங்களைக் கொடுத்திருக்கிறார். அவர் கேட்பதற்கு விவரமான பதிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது அதற்கு பதில் சொல்கிறார். அதைக் கேளுங்கள், அவ்வளவுதான்! (குறுக்கீடுகள்) இதுகுறித்து நேற்றே அவையில் நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) நேற்றே நீங்கள் அவையில் பதிவு செய்துவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) அது ஆய்வில் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. அவையில் பேச அனுமதி இல்லையென்று நான் சொன்னபோது, "நீங்கள் அவையில் இதைப் பதிவு செய்வதற்கு அனுமதி கொடுங்கள்" என்று கேட்டீர்கள். (குறுக்கீடுகள்) நான் மீண்டும் இதுகுறித்து அவையில் பேச அனுமதி கொடுத்தேன். நீங்கள் அவையில் பதிவு செய்துவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)*

நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலில் பேச அனுமதி கேட்டபோது, நான் பேச அனுமதி மறுத்தேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். அதன்பின்னர் நீங்கள் எல்லோரும் வேகமாக எழுந்து பேசி, "நாங்கள் அவையில் பதிவு செய்ய அனுமதி கொடுங்கள்" என்று கேட்டீர்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதி கொடுத்தேன். அதற்கு record என்னிடம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அதற்கான record என்னிடம் இருக்கிறது. நீங்கள் அவையில் பதிவு செய்ததற்கான record என்னிடம் இருக்கிறது. அது அவைக்குறிப்பில் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அந்தப் பத்திரிகை விவரங்களையெல்லாம் என்னிடம் காட்டி, பேச அனுமதி கேட்டீர்கள். (குறுக்கீடுகள்) சரி, அந்தப் பிரச்சினையினுடைய உள் ஆழத்திற்குப் போகாமல், மேலெழுந்தவாரியாகப் பேசுங்கள்; வேண்டுமென்றால் நான் அனுமதியளிக்கிறேன். நீங்கள் மேலெழுந்தவாரியாகத்தான் பேசவேண்டும். அந்த விவரங்களுக்குள் பேசவேண்டாம்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசினால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இதற்குப் பதில் சொல்லமுடியும். நான் என்னவென்று கேட்டால்தான் அவரால் அதற்குப் பதில் சொல்லமுடியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் மேலெழுந்தவாரியாகப் பேசுங்கள். நான் அனுமதி அளிக்கிறேன்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9–5–2013 அன்று தமிழகத்திலே குட்கா, பான் மசாலா போன்றவை தடை செய்யப்பட்டிருக்கின்றன. இப்படித் தடை செய்யப்பட்ட குட்கா விற்பனைமூலம் 250 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்ததாக வந்திருக்கக்கூடிய செய்தியின் அடிப்படையிலே, மாதவராவ் என்பவரின் குடோன்கள் 7–7–2016 அன்று வருமான வரித் துறையின் மூலமாக* raid *செய்யப்பட்டிருக்கின்றன. அங்கே சிக்கியிருக்கக்கூடிய* diary–*கள், கணக்குப் புத்தகங்களில்*

2017 ஜூன் 29] [*திரு. மு.க. ஸ்டாலின்*]

இருக்கக்கூடிய சில பெயர்கள் குறித்து மாதவராவ் அவர்களுடைய ஊழியர்களிடம் இரகசிய விசாரணையும் வருமான வரித் துறை நடத்தியிருக்கிறது. அந்த விசாரணையிலே ஓர் அமைச்சருடைய பெயர் இருக்கிறது. நீங்கள் சொன்ன அறிவுரையின்படி நான் பெயரைச் சொல்லவில்லை. சென்னை மாநகரத்தினுடைய Police Commissioner*–களாக இருந்த உயர் அதிகாரிகள்–அவர்களின் பெயர்களையும் நான் பதிவு செய்யவில்லை–மற்றும்* Police *அதிகாரிகளுக்கு குட்கா விற்பனை செய்தவர், 40 கோடி ரூபாய் மாமூல் கொடுத்திருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.*

முற்பகல் 11–25

இந்த விவரங்களெல்லாம் 11–8–2016 அன்று தலைமைச் செயலாளருக்கு வருமான வரித் துறையால் கடிதம்மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் சென்னை மாநகரத்தினுடைய காவல் துறை ஆணையராக அன்றைக்கிருந்த அந்த போலீஸ் அதிகாரி, 7–9–2016 அன்று நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆக, தமிழக D.G.P. *ஆக இருந்த ஒருவர், 6–9–2016 அன்று நள்ளிரவில் அந்தப் பதவியிலிருந்து விருப்ப ஓய்வு என்ற அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். வழக்கமாக 4–11–2016 அன்றுதான் அவர் ஓய்வு பெற்றிருக்க வேண்டும். இந்த குட்கா விவகாரத்தை விசாரித்து வந்த சென்னை மாநகரக் குற்றப் பிரிவு கூடுதல் ஆணையர் திருநெல்வேலி சரகப் போக்குவரத்துக் கழகத்திற்கு அன்றே அதிரடியாக மாற்றப்பட்டிருக்கிறார். இந்த நிலையில் 21–12–2016 அன்று மாநில தலைமைச் செயலாளர் அவர்களுடைய இல்லம் மற்றும் தலைமைச் செயலகத்தில் இருக்கக்கூடிய அவரது அலுவலகம் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் மிகவும்* detailed *ஆகப் போகின்றீர்கள். (குறுக்கீடு) நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னதால், நான் அதற்கு அனுமதி கொடுத்தேன். (குறுக்கீடு) நீங்கள் தேவையில்லாமல் நிறைய பேசுகின்றீர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமானது. இன்னும் இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துவிடுகின்றேன். தலைமைச் செயலாளர் அவர்களுடைய அலுவலகத்திலும், வருமான வரித் துறையினுடைய* raid *நடந்திருக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் குட்கா சம்பந்தப்பட்ட விஷயத்தைக் கூறுவதாகச் சொன்னீர்கள். அதற்கு நான் அனுமதி கொடுத்தேன். அது போதும், நீங்கள் உட்காருங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று சென்னை மாநகரத்தினுடைய ஆணையராக இருந்தவர், குட்காவில் மாமூல் வாங்கியவர்கள்மீது விசாரணை நடத்த வேண்டும் என்று 22–12–2016 அன்று உள் துறைச் செயலாளருக்கு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னிடம் கொடுத்த ஆதாரத்தின் அடிப்படையில் நான் பதில் கேட்டிருக்கின்றேன். அது சம்பந்தமாக நீங்கள் விளக்கம் கேட்டிருக்கின்றீர்கள். அதன் விவரங்களை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைத்தையும் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) விசாரணையில் இருக்கின்ற விஷயத்தையெல்லாம் detailed ஆகப் பேசினால் எப்படி பதில் சொல்ல முடியும்? இதற்கு நீங்களே பதில் சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையில் கடந்த 27–6–2017 அன்று ஓர் ஆங்கிலப் பத்திரிகை, அதேபோன்று ஓர் ஆங்கிலத் தொலைக்காட்சி, அதில் இந்த குட்கா மாமூல் பற்றிய விவரங்கள் எல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கூறிய அந்த வார்த்தைகள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அதெல்லாம் நீங்கள் கொடுத்த அந்த ரெக்கார்டில் இல்லை. நான் அதைப் பார்த்துவிட்டேன். அந்த ரெக்கார்டில் அப்படியெல்லாம் இல்லை. நீங்கள் அந்தப் பிரச்சினையை எழுப்புங்கள். அதற்கு உண்டான பதிலை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சொல்லச் சொல்கின்றேன். நீங்கள் ஆதாரம் என்று என்னிடம் கொடுத்ததை வைத்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பதில் சொல்லச் சொல்லியிருக்கின்றேன்; அவ்வளவுதான். நீங்கள் மேற்கொண்டு பத்திரிகையில் வந்தது; தொலைக்காட்சியில் வந்தது என்று தேவையில்லாதவற்றையெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடு) அது தேவையா, இல்லையா என்பதெல்லாம், எப்படித் தெரியும்? சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 ஜூன் 29]

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமான வரித் துறை கடிதத்தின் அடிப்படையில் லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப் பதிவு செய்திட வேண்டும். எனவே, இதுகுறித்து C.B.I. உடனடியாக விசாரணை நடத்திட வேண்டும். இதிலே சம்பந்தப்பட்டிருக்கின்ற அந்த அமைச்சரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாகப் பதவியிலிருந்து நீக்கிட வேண்டும். அதேபோன்று, சம்பந்தப்பட்ட போலீஸ் உயர் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்து, அவர்களையும் பதவியிலிருந்து நீக்கிட வேண்டும் என்று தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை செய்யப்பட்டிருந்த குட்கா, பான் மசாலா போன்றவை தமிழகத்திலே மீண்டும் விற்பனை ஆகின்றன என்று எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். தமிழகத்திலே யாருடைய தைரியத்திலே இந்த வியாபாரம் நடைபெறுகிறது? அவர்கள்மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதுதான் இதனுடைய சாராம்சமாகும். இதிலே உள்ள பல பிரச்சினைகளை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது எடுத்து வைத்திருக்கின்றார்கள். அவர் குறிப்பிட்ட நபர்கள் அத்தனைபேரும் உயர் பதவியிலே இருக்கக்கூடியவர்கள். அவர்கள் இந்தத் தவறை செய்திருந்தால் அவர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? ஒன்று; அதனை நீதிமன்றத்திற்கு அனுப்பி இருக்க வேண்டும்; நீதி விசாரணை வேண்டும். இல்லையென்றால், நம்முடைய அரசே அதற்குரிய நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும். உயர் அதிகாரிகள், சென்னை கமிஷனர், மாண்புமிகு அமைச்சர்கள், இன்னும் பெரிய அதிகாரிகள் எல்லாம் இதிலே சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள்.*

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிகழ்வுகள் நடக்கும்போது, பொதுவாக ஒரு கருத்து இருக்கிறது. என்னவென்றால், ஒரு சட்டமன்ற உறுப்பினர்மீது நடவடிக்கை ஏதேனும் எடுக்க வேண்டுமென்றால், தங்களுடைய உத்தரவையும்

[திரு. கரி. இராமசாமி] [*2017 ஜூன் 29*

பெற வேண்டும் என்று விதி இருக்கிறது. அது என்ன நிலையில் இருக்கிறது? சபாநாயகர் அவர்களே இதுபோன்று தவறு செய்பவர்கள்மீது உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்; சம்பந்தப்பட்டவர்களை அந்த நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும். இது என்னுடைய கருத்து. ஏன் இதைச் செய்யக்கூடாது? இதுபோன்ற நிகழ்வுகள் தொடராமல் தடுப்பதற்கு உங்களால் முடியவில்லையென்றால், உடனடியாக CBI *விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்; நீதி விசாரணை வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.* (குறுக்கீடு)

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், இன்றைக்கு நான் திரு. இராமசாமி அவர்களையே ஏதோ அனுமதித்துவிட்டேன். ஆனால், ஆதாரம் என்று எனக்குக் கொடுத்தவர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான். அவர் ஏதோ ஒரு காகிதத்தை என்னிடம் ஆதாரம் என்று கொடுத்தார். அதனால் அவரைத்தான் நான் பேச அனுமதிக்க வேண்டும். ஆனால், நீங்களெல்லாம் திடீர் திடீரென்று எழுந்து நின்று இதுபோன்று பேச வாய்ப்புக் கேட்க முடியாது.* (குறுக்கீடு) *உட்காருங்கள். நீங்கள் நேற்றே பேசிவிட்டீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அபூபக்கர், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்கிறார். நீங்கள் உட்காருங்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், குட்கா போன்ற போதைப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதற்கு இங்கே விளக்கம் கேட்டிருக்கிறார்.*

சென்னை காவல் துறை ஆணையர், தனது 22–12–2016 தேதியிட்ட கடிதத்தில், அரசால் தடைசெய்யப்பட்ட, உடலுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய மாவா மற்றும் குட்கா போன்ற போதைப் பொருட்களை சமூக விரோதிகள், சென்னை காவல்

2017 ஜூன் 29] [திரு. கே. எடப்பாடி பழனிசாமி]

துறையைச் சார்ந்த சில அதிகாரிகள் துணையோடு விற்கவும், தயாரிக்கவும், எல்லாப் பகுதிகளிலும் அதனைப் பிரித்து அனுப்புவதாகவும், தகவல் பெறப்பட்டதாக தமிழக அரசின் உள் துறைச் செயலாளருக்குத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு, அக்கடிதத்தினை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநருக்கு மேற்கண்ட குற்றச்சாட்டுகளின்மீது பூர்வாங்க விசாரணை மேற்கொள்ள 23–1–2017 அன்று ஆணையிட்டு, தற்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் விசாரணையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்பொருள் சம்பந்தமாக திரு. ட்டி. வின்சென்ட் என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில், மத்திய புலனாய்வுப் பிரிவின், CBI *விசாரணை கோரி, தாக்கல் செய்த நீதிப் பேராணை எண் 1846/2017, தலைமை நீதிபதி, நீதியரசர் சஞ்சய் கிஷன் கவுல் மற்றும் நீதியரசர் எம். சுந்தர் அமர்வு முன்பு கடந்த 27–1–2017 அன்று விசாரணைக்கு வந்தபோது, காவல் துறை ஆணையாளர் அவர்களே, இதுகுறித்து ஒரு தனிப்பட்ட விசாரணை மேற்கொள்ள வேண்டி நடவடிக்கை கோரியுள்ளார் எனவும்,*

"We see no reason why the Court should step into this issue when the authorities are themselves conscious of the gravity of the issue" *எனவும், இதில் உயர் நீதிமன்றம் தலையிடத் தேவையில்லை எனவும் தெரிவித்து, மனுவைத் தள்ளுபடி செய்தது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வளவுதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விசாரணைக்கு அனுப்பி வைத்திருக்கிறேன்; விசாரணையில் இருக்கிறது என்று கூறியிருக்கிறாரே? (குறுக்கீடுகள்) அதெல்லாம் இல்லை, (குறுக்கீடுகள்) நீங்கள் இதையெல்லாம் பதிவு செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னிடம் ஓர் ஆவணத்தைக் கொடுத்து, அதுகுறித்து விளக்கம் கேட்டார். நான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அதுகுறித்து பதில் அளிக்குமாறு கேட்டேன். அது தொடர்பான நீதிமன்ற வழக்கு*

குறித்தும், விசாரணை குறித்தும் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்த கடிதத்தின்மீது நான் நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தப் பொருள் விசாரணைக்கு அனுப்பப்பட்டு, அது விசாரணையில் இருக்கிறது என்று கூறியிருக்கிறார். விசாரணையில் இருக்கும்போது, இதற்குமேல் அரசு என்ன பதில் சொல்ல முடியும்? நான்தான் என்ன கேட்க முடியும்? (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) வேறு ஏதாவது இருந்தால் பிறகு கொண்டு வந்து கொடுங்கள், நான் பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், சரி, சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அனுமதித்த இந்த நேரமில்லா நேரத்தை நாங்கள் பயன்படுத்தி, நேற்றையதினம் நாங்கள் தந்திருக்கக்கூடிய ஆதாரங்கள் அடங்கிய அந்தப் பிரச்சினை குறித்து, இங்கே பதிவு செய்வதற்கு நீங்கள் அனுமதி தந்ததற்கு முதலில் உங்களுக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதேநேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய பதிலை இங்கே தெரிவித்தார்கள். அது எங்களுக்குத் திருப்தியளிப்பதாக இல்லை. எனவே, இந்த விசாரணை நடைபெறுகிற நேரத்தில், உண்மையாக, முறையாக, நீதி நிலைநாட்டப்பட வேண்டுமென்று சொன்னால், சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய அமைச்சர் மற்றும் உயரதிகாரிகள். . .

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் வேண்டாம்.

திரு. மு.க. ஸ்டாலின்: ராஜினாமா செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த ஆவணத்திலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எங்கேயும் சொல்லப்படவில்லை. (குறுக்கீடு) நீங்கள் அந்த ஆவணத்தை என்னிடம் கொடுத்தீர்கள். அந்த ஆவணத்தின்மீது நான் நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அதற்கு பதில் சொல்லும்படி

2017 ஜூன் 29] [பேரவைத் தலைவர்]

கேட்டுக்கொண்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக பதில் சொல்லிவிட்டார். அது விசாரணையில் இருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் அதற்குள்ளே போகாமல், சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதில் எங்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. எனவே, அதைக் கண்டிக்கின்ற வகையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டவாறு அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, என்ன சொல்லுங்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன பதிலை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம்.*

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பதில் திருப்தி அளிக்காத காரணத்தினாலே, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக நானும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறேன்.*

(அவ்வுறுப்பினர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)